Literacy for a Billion

Movie: Kadhalukku Mariyadhai
Year: 1997

Song: Ennai thalatta
Lyricist: Pazhani Bharathi

என்னை தாலாட்ட வருவாளோ
நெஞ்சில் பூ மஞ்சம் தருவாளோ
தங்க தேராட்டம் வருவாளோ
இல்லை ஏமாற்றம் தருவாளோ
தத்தளிக்கும் மனமே
தத்தை வருவாளா
மொட்டு இதழ் முத்தம்
ஒன்று தருவாளா
கொஞ்சம் பொறு
கொலுசொ கேட்கிறதே
என்னை தாலாட்ட வருவாளோ
நெஞ்சில் பூ மஞ்சம் தருவாளோ
தங்க தேராட்டம் வருவாளோ
இல்லை ஏமாற்றம் தருவாளோ

பூவிழி பார்வையில்
மின்னல் காட்டினாள்
ஆயிரம் ஆசைகள்
என்னில் ஊட்டினாள்
ஏனோ ஏனோ
நெஞ்சை பூட்டினாள்
இரவும் பகலும்
என்னை வாட்டினாள்
இதயம் அவள்
பெயரில் மாற்றினாள்
காதல் தீயை
வந்து மூட்டினாள்
நான் கேட்கும் பதில்
இன்று வாராதா
நான் தூங்க
மடி ஒன்று தாராதா
தாகங்கள் தாபங்கள் தீராதா
தாளங்கள் ராகங்கள் சேராதா
வழியோரம் விழி வைக்கிறேன்
எனது இரவு

அவள் கூந்தல்
எனது பகல்கள்
அவள் பார்வையில்
காலம் எல்லாம்
அவள் காதல்
கனவு கலையவில்லை
கண்களில்
இதயம் துடிக்கவில்லை
ஆசையில்
வாழ்வும் தாழ்வும்
அவள் வார்த்தையில்
கண்ணுக்குள் இமையாக
இருக்கின்றாள்
நெஞ்சுக்குள் இசையாக
துடிக்கின்றாள்
நாளைக்கு நான் காண
வருவாளோ
பாலைக்கு நீர் ஊற்றி
போவாளோ
வழியோரம் விழி வைக்கிறேன்
என்னை தாலாட்ட வருவாளோ
நெஞ்சில் பூ மஞ்சம் தருவாளோ
தங்க தேராட்டம் வருவாளோ
இல்லை ஏமாற்றம் தருவாளோ
தத்தளிக்கும் மனமே
தத்தை வருவாளா
மொட்டு இதழ் முத்தம்
ஒன்று தருவாளா
கொஞ்சம் பொறு
கொலுசொ கேட்கிறதே
என்னை தாலாட்ட வருவாளோ
வருவாளோ
நெஞ்சில் பூ மஞ்சம் தருவாளோ
தருவாளோ
தங்க தேராட்டம் வருவாளோ

வருவாளோ தருவாளோ
இல்லை ஏமாற்றம் தருவாளோ

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.